***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No.98/2017 – P.W. 1 (LW1)***

| | |
|---|---|
| *Name* | சிவக்குமார் |
| *Father/Husband's Name* | செல்லமுத்து |
| *Village* | மன்னுர்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 55 |

**எதிரிகள் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 09.09.2025.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். பெரிய கம்மாளதெருவில் மீனா ஜுவல்லரி என்ற கடை நடத்தி வருகிறேன். அதற்கு அருகில் எனது கடை உள்ளது. பட்டியல் சாட்சி -2 செல்லமுத்து எனது அப்பா ஆவார். தற்போது இறந்து விட்டார்.

கடந்த 25.03.2015 ம் தேதி மாலை 06.00 மணியளவில் எனது மீனா ஜுவல்லரியில் ஒரு வாடிக்கையாளரிடம் நாணல்குழாய் வியாபாரம் செய்து கொண்டிருந்தோம். அப்போது 40 வயதிற்கு மேல் மதிக்கதக்க 3 பெண்கள் ஜுவல்லரிக்கு வந்தனர். எனது அப்பாவிடம் தோடு, தொங்கல் வேண்டும் என்று கேட்டனர். நான் தோடு தொங்கல் டிரேயை எடுத்து அதை எண்ணி பார்த்து விட்டு எனது அப்பாவிடம் கொடுத்து காட்டசொன்னேன். அந்த 3 பெணகளில் வெள்ளை நிறபுடவைகட்டி பாப் கட்டிங் உடன் இருந்த ஒரு பெண் 4 கிராம் தோடு தொங்கலை எடுத்து எடை போடுமாறு என் தந்தையிடம் கொடுத்தார். அவர் நீதிமன்றத்தில் எதிரிகள் வரிசையில் 1 வது நிற்பவர் தான். நான் அவர் தேர்ந்தெடுத்த 4 கிராம் தோட்டிற்கு பில் தயார் செய்து என் தந்தையிடம் கொடுத்து அவர்களிடம் கொடுத்தார். அவர்கள் மூவரும் 1000/- விலை குறைக்கும் படி எங்களிடம் பேரம் பேசினார்கள். அதற்கு நாங்கள் கட்டாது என்று கூறிவிட்டோம். பிறகு மூவரும் கடையில் இருந்து சென்று விட்டனர். எனது கடைக்கு வந்த மூன்று பெண்களும் நீதிமன்றத்தில்

ஆஜராகியுள்ள எதிரிகள் தான். இவர்கள் சென்றபிறகு மற்றொரு வாடிக்கையாளர் எனது கடைக்கு வந்திருந்தார். அவர் 8 கிராம் செயின் என்னிடம் கேட்டார். அதை நான் எடுப்பதற்காக உட்பக்கமாக இடது பக்கம் இருந்த ஷோகேஸில் வைத்திருந்த டிரேவை பார்த்தபோது அதில் எந்த நகையும் இல்லை. உடனே நான் அதிர்ச்சி அடைந்து விட்டேன். பக்கத்தில் அடகு கடை வைத்திருக்கும், அடகு கடை சென்டர் மோகன் என்பவரிடம் சென்று நடந்த விபரத்தை கூறினேன். பின்பு அவரும் நானும், எனது கடையில் இருந்த சிசிடிவி கேமராவை பார்த்தபோது கடைக்கு வந்து தோடு, தொங்கல் கேட்ட மூன்று பெண்கள் தான் அந்த நகைகளை எடுத்தார்கள் என்று பார்த்து தெரிந்து கொண்டேன். எனது கடையின் திருட்டு போன நகைகள் 2 பவுன் செயின் நான்கு, 1 பவுன் செயின் -4, அறை பவுன் செயின் - 1, 12 கிராம் கைச்செயின் -2 மொத்தம் 124 கிராம் ஆகும். பின்பு கடைக்கு வெளியே இந்த மூன்று பெண்களையும் தேடிபார்த்தோம். காணவில்லை. பின்பு மோகன் என்பவரின் வீட்டு வாசலில் உள்ள வேம்பமரத்தில் இருந்த சிசிடிவி கேமராவை பார்த்தபோது என் கடையில் இருந்து தெறகு பக்கம் ஒரு பெண் நின்று கொண்டிருந்தார். பின்பு நம்பர் பிளேட் இல்லாத ஒரு ஆட்டோவில் எதிரிகள் மூவர் மற்றும் அங்கு நின்றிருந்த பெண் நான்கு பேரும் ஏறி சென்று விட்டனர். நான் நகை கடை மற்றும் அடகு கடை சங்கத்தில் பொருளாளராக இருந்தேன். எனது கடையில் திருட்டு போன சம்பவம் குறித்து தொலைபேசியில் மன்னார்குடி நகர போலீசாரை தொடர்பு கொண்டு கூறினேன். அவர்கள் வெண்ணைதாழி திருவிழாவில் பாதுகாப்பு பணியில் இருப்பதாக கூறினார்கள். மறுநாள் இரவு 08.30 மணியளவில் சம்பவ இடத்தை வந்து பார்த்து விசாரித்தனர். இச்சம்பவம் தொடர்பாக நான் புகார் மனு அளித்தேன்.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** என்னுடைய புகாருடன் சம்பவம் தொடர்பான சிசிடிவி புட்டேஜ் அடங்கிய சிடி மற்றும் போட்டோவை போலீசாரிடம் கொடுத்தேன். தற்போது என்னிடமும் உள்ளது. பிறகு 6 மாதம் கழித்து மன்னார்குடி நகர போலீசார் நீதிமன்றத்தில் எதிரிகள் வரிசையில் நிற்கும் முதலாவது நபரை என்னிடம் காண்பித்து கேட்டார்கள். நான் இவர் தான் என்று அடையாளம் காட்டினேன். பிறகு திருடுபோன எனது நகைகளை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டேன்.

நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் போட்டோவில் உள்ள நகைகள் தான் என்னுடைய கடையில் திருட்டுபோன நகைகள் ஆகும். **மேற்படி புகைப்படம் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.